முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 23.03.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

**அசல் வழக்கு எண். 01/2025**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம் உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லோகநாதன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | கன்னியப்பன் | வயது | : | 77 |
| ஊர் | : | செய்யாறு | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 3 (லோகநாதன்) : குறுக்கு விசாரணை:**

1. எனக்கு இந்த வழக்கு சங்கதிகள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் 10 வயதிலிருந்தே விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கினை யார் மீது யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு படிக்க தெரியாது என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியாது என்றும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்தில் யார் அழைத்தார்கள் என்றால் நடராஜன், பழனி, பூங்காவனம் அழைத்தார்கள் அவர்கள் என் பக்கத்து நிலத்துக்காரர்கள் ஆவார்கள். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்று தெரியுமா என்றால் தெரியாது. விஸ்தீரணம் 96 சென்ட்டாகும். ஜக்பந்தி தெரியுமா என்றால் தெரியும். ஜக்பந்தி கீழண்டை கலகாமுத்தன், மேலண்டை நடராஜன், வடவண்டை பூங்காவனம், தென்னண்டை வரதன் ஆகும்.

2. வழக்கு தாக்கல் செய்துள்ள ஜக்பந்திக்கும் நான் தற்போது சொன்ன ஜக்பந்தியும் வெவ்வேறு என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன ஜக்பந்திதான் சரி. இந்த வழக்கு சொத்தினை யார் யார் கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 12 பேர்கள் சேர்ந்து வழக்கு சொத்தினை கிரயம் பெற்றார்கள். அதில் என் அண்ணன் ஒருவரும் ஆவார். 12 பேர்க்கு முன் யார் வழக்கு சொத்தினை வைத்திருந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் 12 பேரும் ரங்கநாயகி அம்மாளிடம் இருந்து கிரயம் பெற்றார்கள். 12 பேருக்கு முன் வழக்கு சொத்தினை யார் கிரயம் பெற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரத்தினை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய அண்ணனும் வாங்கினார். ரங்கநாயகியம்மாள் எந்த ஊர் என்றும் அவர் எங்கு வசித்து வந்தார் என்றும் தெரியுமா என்றால் அவர் ஆரணியில் இருந்தார் என்று என் தந்தை கூறி தெரியும். அவர் 12 பேருக்கு கிரயம் கொடுத்த பிறகு சித்தூருக்கு சென்றுவிட்டார். மேற்படி தகவல்கள் என்னுடைய தந்தை சொல்லிதான் எ னக்கு தெரியும் என்றால் சரிதான்.

3. மேற்படி விவரத்தினை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் உள்ள பிரதிவாதிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி வழக்கு சொத்தினை கிரயம் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சொத்தினை பொறத்து ஏற்கனவே ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொன்னார்கள். தற்போது வழக்கு சொத்தானது யார் பெயரில் உள்ளது என்றும் யார் பெயரில் பட்டா உள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். யார் யார் பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். ரங்கநாயகியம்மாளின் கணவர் பெயரோ அல்லது அவருக்கு

எத்தனை வாரிசுகள் என்றோ அந்த விவரம் எனக்கு தெரியாது. தினகரன், சுப்பராயன் ஆகியோர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இந்த சொத்தினை பற்றி எந்த ஒரு விசாரணையும் யாரிடமும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரங்கநாயகியம்மாளை பார்க்க ஆரணிக்கோ, சித்தூருக்கோ சென்றேனா என்றால் இல்லை. என் அண்ணன்தான் சென்றார். மேற்படி விவரம் அனைத்தும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி 12 நபர்களும் கிரயம் வாங்கும்போது எனக்கு 1994 லேயே என் அண்ணன் சொல்லி தெரியும். அண்ணனுக்குத்தான் அனைத்து விவரங்களும் தெரியும் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்ன என்ன விவரங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் வாதி நடராஜன் என்பவர் என் அண்ணன் இறந்துவிட்டதால் சாட்சி சொல்ல வருமாறு அழைத்ததால்தான்சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்பதனால் நான் சாட்சி சொல்ல தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் அனைவரும் சொத்து பிரச்சனையை ஏற்படுத்தி அதிலிருந்து பணம் சம்பாதிப்பதை தான் வாடிக்கையாக வைத்துள்ளார்கள் என்றும் அவர்களுடன் நான் கூட்டு சேர்ந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அப்படியெல்லாம் இல்லை. நாங்கள் பொது வழிக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். எனக்கு 5 ஏக்கர் சொத்து நிலம் உள்ளது. அதனின் சர்வே எண் 646, 647, 649 ஆகும். பட்டா எண். 263 ஆகும். ஆத்தோரம் காழியூர் கிராமத்தில் உள்ளது. என் சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100, 200 மீட்டர் தூரம் இருக்கும். நான் ஆத்து மணலை எடுத்து விற்பனை செய்வதால் பிரதிவாதி சரவணன் என்பவர் வருவாய்த்துறையில் புகார் கொடுத்ததால் நான் பழிவாங்கும் நோக்கத்திற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.03.23 18:41:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு